

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று முன்தினம் (3.22025) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் மாதவரம் சட்டமன்ற தொகுதி. புழல் ஒன்றியம், விளாங்காடுபாக்கத்தில் ரூ.8.65 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய சமுதாய நலக்கூடத்தின் பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதிகாகர்லா உஷா, சி.எம்.டி.ஏ. முதன்மை செயல் அலுவலர் அசிவஞானம். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் வை.ஜெயக்குமார், விளாங்காடுபாக்கம் முன்னாள் ஊராட்சி மன்றத்தலைவர் பாரதி சரவணன், தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் எஸ்.ருத்ரமூர்த்தி, ந.ரவிக்குமார். கண்காணிப்புப் பொறியாளர் ராஜமகேஷ்குமார், உள்ளாட்சி பிரதிநிதிகள் புழல், எம்.நாராயணன் சரவணன் மற்றும் சி.எம்.டி.ஏ அலுவலர்கள் உடனிருந்தனர்.



திருவெண்ணைநல்லூர் கம்பன் விழா அக்குழுவின் தலைவர் அஞ்சுகம் கணேசன் தலைமை யில் நடைபெற்றது. கௌரவத் தலைவர் கு.சரவணகுமார் முன்னிலை வகித்தார். விழாவில் வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். ஒன்றிய செயலாளர் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், பேரூர் செயலாளர் பூக்கடை கணேசன், ஒன்றிய குழு தலைவர் ஓம் சிவ சக்திவேல் உள்ளிட்ட பள்ளி மாணவ, மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.

### இலங்கை வசம் உள்ள அனைத்து மீனவர்களையும் – மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்க

# தூதரக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்!

### ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, பிப்.5-**

**இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 10 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் நேற்று முன்தினம் (3-2-2025) கைது செய்துள்ள நிலையில், கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவித்திட உடனடியாக தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், - ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று முன்தினம் (3-2-2025) கடிதம் எழுதியுள்ளார்.**

அக்கடிதத்தில், இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 02.02.2025 அன்று மீன்பிடிக்கச் சென்ற 10 மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகினையும் நேற்று முன்தினம் (3.2.2025) இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளதையும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 27 நாட்களில், 5 வெவ்வேறு சம்பவங்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 63 மீனவர்கள் மற்றும் 5 மீன்பிடிப் படகுகள் இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ளதையும், கடந்த 2024 ஆம் ஆண்டில் 36 வெவ்வேறு சம்பவங்களில் 530 மீனவர்கள் மற்றும் 71 மீன்பிடிப் படகுகள் சிறைபிடிக்கப் பட்டுள்ளதையும் தனது கடிதத்தில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது இலங்கை சிறையிலுள்ள 97 மீனவர்களும், கைப்பற்றப்பட்டுள்ள 216 மீன்பிடிப் படகுகளும் மீட்கப்பட வேண்டிய நிலையில் உள்ளதையும் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

இலங்கைக் கடற்படையினரால் மீனவர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் தொடர்ந்து இதுபோன்று நடைபெற்று வருவது, இந்தச் சிக்கலான பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காண வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகிறது என்றும், மீனவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்து வைத்திருப்பதும், அவர்களது மீன்பிடிப் படகுகளை விடுவிக்காமல் இருப்பதும், கடலோரப் பகுதியில் வாழும் மீனவ சமுதாயத்தினருக்குப் பெரும் பொருளாதார இழப்பை ஏற்படுத்தியுள்ளதாக கவலையோடு தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இவ்வாறான தொடர் கைது நடவடிக்கைகளால் நூற்றுக்கணக்கான மீனவக் குடும்பங்கள் அச்சத்துடன் வாழ்வதுடன், பல்வேறு சிரமங்களையும் எதிர்கொள்வதாக தனது கடிதத்தில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, நமது இந்திய மீனவர்கள் இதுபோன்று கைது செய்யப்படுவதை நிறுத்தவும், இலங்கையின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்கவும், உடனடியாக உயர்மட்ட தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களை, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

### ‘உடான்’ திட்டத்தின் கீழ் பணிகள் நிறைவுபெற்றது:

# நெய்வேலி மற்றும் வேலூருக்கு விரைவில் விமானச் சேவை தொடங்கும்!

### மாநிலங்களவையில் – டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில்!

*புதுடெல்லி, பிப்.5-*

மாநிலங்களுக்குள்ளாக மண்டலங்களை விமான சேவை மூலம் இணைக்க வகை செய்யும் உடான் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் தேர்வு செய்யப்பட்டுள்ள விமான நிலையங்கள் எவை? அதற்கான ஏற்பாடுகள் எந்த நிலையில் உள்ளன? எப்போது அவை பயன்பாட்டுக்கு வரும் என்று மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி., டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு கேள்வி எழுப்பி இருந்தார்.



இதற்கு ஒன்றிய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை இணையமைச்சர் முரளிதர் மொஹல் அளித்த பதில்:

விமான சேவை மூலம் மண்டலங்களை இணைக்கும் உடான் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் சேலம், வேலூர், நெய்வேலி, தஞ்சாவூர் மற்றும் ராமநாதபுரம் ஆகிய ஐந்து இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, அந்தந்த ஊர்களில் விமான நிலையங்களை அமைக்கும் பணியும், மேம்படுத்தும் பணிகளும் நடந்து வருகின்றன. இதில் சேலத்திலிருந்து விமான சேவை தொடங்கப்பட்டுவிட்டது.

நெய்வேலி மற்றும் வேலூரில் விமான நிலையப் பணிகள் நிறைவடைந்து, அது தொடர்பான லைசென்ஸ்களைப் பெறும் பணிகள் நடந்து வருகிறது. விரைவில் இந்த இரண்டு ஊர்களிலும் விமான சேவை தொடங்கப்பட இருக்கிறது.

ராமநாதபுரத்தில், விமானநிலையம் அமைக்கத் தேவையான இடத்தை கையகப்படுத்தும் பணியில் தமிழ்நாடு அரசு ஈடுபட்டிருக்கிறது. தஞ்சாவூரில் விமான நிலைய அணுகு சாலைக்கான இடம் விமான நிலைய ஆணையத்தின் வசம் வந்ததும் கட்டடப் பணிகள் தொடங்கும்.

இதுதவிர, தமிழ்நாட்டில் அரக்கோணம், செட்டிநாடு, சோழவரம், சூலூர் மற்றும் உளுந்தூர் பேட்டை ஆகிய இடங்களில் பொதுமக்கள் பயன்பாட்டுக்காக பயன்படுத்தப்படாமல் இருக்கும் விமான ஓடுபாதைகளை சீர்படுத்தி அவற்றை உடான் திட்ட த்தின் கீழ் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக ஏலம் விடவும் துறை ரீதியான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன.

உடான் திட்டம் என்பது, வணிகம் சார்ந்த ஒரு திட்டமாகும். உடான் திட்டத்தின் கீழ் ஒரு மார்க்கத்தில் விமான சேவை தொடங்கப்பட்டால், அதற்கு கிடைக்கும் வரவேற்பு, கூடுதல் தேவை உள்ளிட்ட பல காரணிகளை வைத்து அவ்வப்போது அந்த விமான மார்க்கத்திற்கான ஏலம் நடைபெறும்.

விமனங்களை இயக்கும் நிறுவனங்கள் இத்தகைய விமான மார்க்கங்களை தொடர்ச்சியாக கண்காணித்து ஏலத்தில் பங்கேற்பார்கள். ஏலத்தின் முடிவில் விருப்பமுள்ள, தகுதியான நிறுவனத்திற்கு விமானங்களை இயக்க அனுமதி வழங்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் முரளிதர் மொஹல் தெரிவித்தார்.




பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு நாளையொட்டி நேற்று முன்தினம் (03.02.2025) திருவான்மியூர் மருந்தீசுவரர் திருக்கோயிலில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சியில் வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் கலந்து கொண்டார்.



பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு தினத்தை முன்னிட்டு திருவாரூர் மாவட்ட கழகம் சார்பில் திருவாரூரில் அண்ணா சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. மாவட்டச்செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் நகரகழக செயலாளர் வாரை. எஸ் பிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர் டி .செந்தில், திட்டக்குழு முன்னாள் உறுப்பினர் இரா சங்கர் ,பொருளாளர் ரஜினி சின்னா மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பங்கேற்றனர்.




## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

### ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், கழக இளைஞர் அணி மண்டலம்–3 க்கு உட்பட்ட காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, இராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு ஆகிய கழக மாவட்டங்களுக்கான ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான அறிமுகக் கூட்டத்தை, மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், அந்தந்த மாவட்டங்களில் ஏற்பாடு செய்திட வேண்டுமென மாநில இளைஞர் அணித் துணைச் செயலாளர், மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 03-02-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி